ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1940/7 - 2015 නොවැම්බර් මස 09 වැනි සඳුදා - 2015.11.09

*1940/7 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய அரசப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம்**

தேசிய அரசப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 41வது பிரிவின் கீழ் விளையாட்டுக்கள் அமைச்சரினால் வகுக்கப்படும் ஒழுங்கு விதிகள்.

தயாசிறி ஜயசேகர,
விளையாட்டுக்கள் அமைச்சர்.

கொழும்பு,
2015, நவெம்பர் 09.

**ஒழுங்கு விதிகள்**

2013, சனவரி மாதம் 15 ஆந் திகதிய 1793/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, தேசிய விளையாட்டுச் சங்கத்தின் ஒழுங்குவிதிகள் கொண்ட13 மற்றும் 17 ஆம் பிரிவுகளைக் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு இத்தால் திருத்தியமைக்கின்றேன்.

(1) 13 (1) ஒழுங்குவிதியின் "எவரேனும் ஒருவர்" என்ற சொற்பதத்திற்குப் பின்னால் உள்ள "மேற்கூறப்பட்ட எந்தவொரு பதவி" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "அப்பதவி" என்ற சொல்லை பதிலீடு செய்வதன் மூலம்.

(2) ஒழுங்குவிதி இலக்கம் 13 (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள இடைக்காலக் கட்டளையின் இறுதிக்கு கீழ் குறிப்பிடப்பட்ட புதிய இடைக்கால கட்டளையினை உள்ளடக்குவதன் மூலம்.

"தொடர்ந்தும் எவ்வாறாக இருப்பினும், நான்கு ஆண்டுகால முழுமையான வேலைக்காலத்தின் மொத்தத்தை கணிப்பீடு செய்ய முடிவது 2013, சனவரி மாதம் 15 ஆந் திகதி அதாவது இவ்வொழுங்கு விதிகள் அமுல்படுத்தப்பட்ட தினம் தொடக்கம்."

(3) 17 ஆவது ஒழுங்கு விதியின் "ரகசிய வாக்கெடுப்பு மூலம்" என்ற வாசகத்திற்குப் பதிலாக "கை உயர்த்துவதன் மூலம்" என்ற சொற்களை பதிலீடு செய்வதன் மூலம்.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.